**அக்டோபர் – 06**


# TNPSC துளிகள்

❖ புவாலோய் புயல் ஆனது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதியன்று வடக்கு மத்திய வியட்நாமில் கரையைக் கடந்தது என்பதோடு, இதன் காரணமாக 51 பேர் உயிரிழந்தனர்.

❖ சிங்கப்பூர் கடற்படையால் சிங்கப்பூரில் நடத்தப்பட்ட பன்னாட்டு நீர்மூழ்கிக் கப்பல் மீட்புப் பயிற்சியான பசிபிக் ரீச் 2025 பயிற்சியில் இந்தியா உள்பட 40க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் விதி 311ன் பயன்பாடு




❖ திருவண்ணாமலை காவல்துறை கண்காணிப்பாளர் (எஸ்பி), திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் பணிபுரியும் இரண்டு காவலர்களை பணி நீக்கம் செய்யும் உத்தரவை பிறப்பித்தார்.

❖ வடக்கு மண்டல காவல் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின் பேரில், அரசியலமைப்பின் பிரிவு 311ன் கீழ் விதிகளைப் பயன்படுத்தி எஸ்பி, அக்காவலர்களைப் பணிநீக்கம் செய்தார்.

❖ இது "ஒன்றிய அரசு அல்லது ஒரு மாநிலத்தின் கீழ் குடிமைப் பதவிகளில் பணியமர்த்தப்பட்ட நபர்களைப் பணி நீக்கம் செய்தல், நீக்குதல் அல்லது தகுதியினைக் குறைத்தல்" ஆகியவற்றைக் கையாள்கிறது.

❖ குற்றம் சாட்டப்பட்ட ஊழியருக்கு எதிராக விசாரணை நடத்தாமல் எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றும், குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவருக்கு நியாயமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த விதி கூறுகிறது.

❖ ஆனால், அரசியலமைப்பின் விதி 311ன் பிரிவு 2(b) இன் கீழ் எஸ்பி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

❖ ஒரு தகுதி வாய்ந்த அதிகாரி "ஒரு நபரைப் பணிநீக்கம் செய்யவோ அல்லது நீக்கவோ அல்லது தகுதியினைக் குறைக்கவோ அதிகாரம் பெற்றிருந்தால், அந்த அதிகாரியால் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய சில காரணங்களால், அத்தகைய

விசாரணையை நடத்துவது நியாயமான நடைமுறைக்குச் சாத்தியமில்லை" என்று திருப்தி அடைந்தால், அந்தப் பணியிலிருந்து அந்த நபரைப் பணி நீக்கம் செய்வது நியாயமானது என்று அது கூறுகிறது.

- சுருக்கமாக, விதி 311-ன் படி, ஒரு பணியாளரைப் பணி நீக்கம் செய்வதற்கு துறை ரீதியான எவ்வித விசாரணையும் தேவையில்லை.
- இதன் கீழ், அரசுப் பணியில் ஒருவரைத் தக்க வைத்துக் கொள்வது அரசின் பாதுகாப்பிற்குப் பாதகமானது என்று திருப்தி அடைந்தால், வழக்கமான நடைமுறையைப் பயன்படுத்தாமல் அவரைப் பணி நீக்கம் செய்ய அரசுக்கு அதிகாரம் உண்டு.
- விதி 311-ன் கீழ் ஒரு காவல்துறை அதிகாரியின் முதல் பணி நீக்கம் மதுரையில் பதிவாகியுள்ளது.
- ஒரு தொழிலதிபரிடமிருந்து ₹10 லட்சத்தைப் பறித்ததற்காக கைது செய்யப்பட்ட பின்னர், ஏப்ரல் 11, 2023 அன்று ஒரு இன்ஸ்பெக்டர் விசாரணை எதுவும் இல்லாமல் பணி நீக்கம் செய்யப் பட்டார்.
- குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியின் பணி நீக்கத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை தள்ளுபடி செய்தது.

## TET தேர்வு குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு




- TET தேர்வு குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரிய முதல்கட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.
- இது பள்ளி ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகளில் கற்பித்தல் தகுதித் தேர்வுக்கு (TET) தகுதி பெறுவது அல்லது கட்டாயமாக ஓய்வு பெறுவது என்ற இரண்டு தேர்வுகளை வழங்கியது.
- செப்டம்பர் 1, 2025 அன்று, நீதிபதிகள் தீபங்கர் தத்தா மற்றும் மன்மோகன் ஆகியோர் அடங்கிய இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, அரசியலமைப்பின் விதி 142ன் கீழ் நீதிமன்றத்தின் அசாதாரண அதிகாரங்களைப் பயன்படுத்தியது.
- நாடு முழுவதும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணிக் காலம் மீதமுள்ள ஆசிரியர்கள்

இரண்டு ஆண்டுகளில் TET தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்று அது உத்தரவிட்டது.

- 2009 ஆம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டம் (RTE) 2010 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது.
- ஆசிரியர்கள் TET தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்று அது கட்டாயப்படுத்தியது.
- ஓய்வு பெறுவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான ஆசிரியர்களுக்கு மட்டுமே TET தேர்வில் தேர்ச்சி பெறாமல் இருக்க அந்த அமர்வு வாய்ப்பு வழங்கியது.
- இது, குழந்தைகள் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (RTE) 2009 என்பதின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி, அரசு உதவி பெறாத மற்றும் தனியார் பள்ளிகளில் பணி புரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.
- நாடு முழுவதும் உள்ள சிறுபான்மையினர் அல்லாதப் பள்ளிகளில் 1-8 வகுப்புகளில் பணி புரியும் ஆசிரியர்கள் ஆசிரியர் தகுதித் தேர்வில் (TET) இரண்டு ஆண்டுகளில் தேர்ச்சி பெற வேண்டும் அல்லது "கட்டாயமாக அவர்கள் ஓய்வு பெற்றிட வேண்டும்" என்று இது கோருகிறது.
- மேலும், சிறுபான்மை கல்வி நிறுவனங்களும் RTE சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட வேண்டுமா என்ற கேள்வியை இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு ஒரு பெரிய அமர்வுக்குப் பரிந்துரைத்தது.
- பிரமதி கல்வி மற்றும் கலாச்சார அறக்கட்டளை வழக்கில் 2014 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அமர்வு வழங்கிய ஒரு தீர்ப்பை தற்போது இரண்டு நீதிபதிகள் கொண்ட இந்த அமர்வு விமர்சித்துள்ளது.
- அந்த வழக்கு சிறுபான்மை நிறுவனங்களை RTE சட்டத்தின் வரம்பிற்கு முற்றிலும் வெளியே கொண்டு சென்றது.
- சமீபத்திய 1 ஆம் தேதி தீர்ப்பு, மதம் அல்லது மொழியியல் ரீதியாக சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளை RTE சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வருவதற்கு வலுவான வாதத்தை முன்வைத்தது. .
- இச்சர்ச்சையின் மையத்தில் RTE சட்டத்தின் பிரிவு 23ன் விளக்கம் உள்ளது.
- அதன் படி, தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் (NCTE) அமைப்பானது, ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை ஆசிரியராக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச தகுதிகளை நிர்ணயித்துள்ளது.
- இது ஆகஸ்ட் 23, 2010 அன்று அதன் அறிவிப்பின் மூலம் அறிவிக்கப் பட்டது.
- ஒரு அத்தியாவசிய தகுதி என்பது பொருத்தமான அரசாங்கத்தால் நடத்தப் படும் TET தேர்வில் தேர்ச்சி பெறுவதாகும்.
- ஆசிரியர் தேர்வுச் செயல்பாட்டில் தேசியத் தரநிலைகள் மற்றும் ஆசிரியர் தரத்தின் அளவுகோலைக் கொண்டு வருவதே TET தேர்வைச் சேர்ப்பதற்கான காரணம் ஆகும்.
- ஆனால் RTE சட்டம் மற்றும் விதிமுறைகளை பின்னோக்கிப் பயன்படுத்த முடியாது என்று தமிழ்நாடு வாதிட்டது.
- தமிழ்நாடு தனது மறு ஆய்வு மனுவில், பிரிவு 23(1) என்பது எதிர்கால ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கு மட்டுமே பொருந்தும் என்று வாதிட்டது.
- மேலும் பிரிவு 23(2) என்பதையும் தமிழக அரசு குறிப்பிட்டது.
- இப்பிரிவானது மாநிலங்களானவை ஆசிரியர் பற்றாக்குறை அல்லது நிறுவனப் பற்றாக்குறை போன்ற தற்செயல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தால், ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதிகளை தளர்த்த ஒரு அறிவிப்பின் மூலம்

மத்திய அரசிற்கு இது அதிகாரம் அளிக்கும்.

- பிரிவு 23 உடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு நிபந்தனையானது, RTE சட்டம் தொடங்கப்பட்ட போது குறைந்தபட்சத் தகுதிகள் (TET) இல்லாத எந்தவொரு ஆசிரியரும் ஐந்து ஆண்டுகளுக்குள் அத்தகைய தகுதிகளைப் பெற வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது.
- பிரிவு 23 என்பது TET-க்கு "பொதுவான ஆணையை" கோரவில்லை அல்லது குறைந்தபட்சத் தகுதிகள் (TET) அறிவிக்கப் படுவதற்கு முன்பு செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைப் பின்னோக்கி தகுதி நீக்கம் செய்ய என்று இவ்விதியின் விளக்கத்தை நீட்டிக்க முடியாது.
- ஒரு வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினரில் ஒருவரால் பொதுவாக மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்படுகிறது.
- இது நீதிமன்றம் தனது முந்தைய உத்தரவை மறு பரிசீலனை செய்யக் கோருகிறது.
- மறு ஆய்வு மனு அடிப்படையில் எந்த தரப்பினரும், வழக்கறிஞர்(கள்), வழக்குரைஞர்கள் அல்லது யாருடைய முன்னிலையிலும் இல்லாமல் ஒரு அறை விசாரணையில் விசாரிக்கப் படுகிறது.
- முந்தைய உத்தரவு/தீர்ப்பை அறிவித்த அதே நீதிபதி(கள்) இவ்வழக்கை மீண்டும் விசாரித்து, இவ்வழக்கை ஆராய்ந்த பிறகு ஒரு உத்தரவை பிறப்பிக்கிறார்.
- இந்த விஷயத்தில் ஒரு உத்தரவைப் பிறப்பிக்க நீதிபதிகள் சுமார் அரை மணி நேரம் அல்லது அதற்கும் மேலான நேரத்தை மட்டுமே எடுத்துக் கொள்கிறார்கள்.

## குறைவாக அறியப்படுகின்ற அருகி வரும் உயிரினங்களின் பாதுகாப்பு




- சிங்க வால் குரங்கு, மதராஸ் முள்ளம்பன்றி, வரிகள் கொண்ட கழுதைப் புலி மற்றும் கூம்புத் தலை பெளி மீன் ஆகிய நான்கு குறைவாக அறியப்படுகின்ற அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக தமிழக அரசானது 1 கோடி ரூபாய் நிதியை வழங்கியுள்ளது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படும் அருகி வரும் விலங்கினமான சிங்க வால் குரங்கினை பாதுகாப்பதற்கு 48.5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளாவின் பகுதியளவு வறண்ட பகுதிகளில் காணப்படும் மதராஸ் முள்ளம்பன்றியின் பாதுகாப்பிற்காக 20.5 இலட்சம் ரூபாய் வழங்கப் படும்.
- முதுமலை புலிகள் சரணாலயம் போன்ற பகுதிகளில் எண்ணிக்கைக் குறைவை எதிர் கொள்ளும் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த வரிகள் கொண்ட கழுதைப் புலியின்

பாதுகாப்பிற்காக 14 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- மோயாறு ஆற்றில் மிகவும் அருகி வரும் கூம்புத் தலை பெளி மீன்களின் மீட்சிக்காக 17 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்படும்.
- சிங்க வால் குரங்கு இனத்தின் இயக்கத்திற்கான வன இணைப்பினை மேம்படுத்துவதற்காக மரங்களின் விதானப் பாலங்கள் அமைக்கப்படும்.
- உள்ளக வளர்ப்பு மற்றும் மறு மேம்பாட்டுத் திட்டங்கள் ஆனது, பெளி மீன் இனத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

### தமிழ்நாடு காற்றாலை உற்பத்தித் திறன் 2025/26

- தமிழ்நாட்டில் காற்றாலை ஆற்றல் பயன்பாடு ஆனது, 2025-2026 ஆம் ஆண்டில் 29.6 சதவீதத்தினை எட்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்ற நிலையில், இது 2018-2019 ஆம் ஆண்டிற்குப் பிறகுப் பதிவான அதிகபட்ச அளவாகும்.
- தமிழ்நாட்டில் 10,000 மெகாவாட்டிற்கும் அதிகமான நிறுவப்பட்ட காற்றாலை ஆற்றல் திறன் உள்ளது.
- உச்ச கட்ட காற்றாலை மின் உற்பத்தியானது பொதுவாக ஆண்டுதோறும் மே மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலங்களில் மேற்கொள்ளப்படுகிறது.





## தேசியச் செய்திகள்

### மாதிரி இளையோர் கிராம சபை

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது, கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பள்ளிகளில் மாதிரி இளையோர் கிராம சபையைத் (MYGS) தொடங்கியுள்ளது.
- உள்ளூர் நிர்வாகம் பற்றி அறிவதற்காக மாணவர்கள் போலி கிராம சபை அமர்வுகளை நடத்தினர்.
- இந்த முன்னெடுப்பு ஆனது, ஜவஹர் நவோதயா வித்யாலயாக்கள் மற்றும் ஏக்லவ்யா மாதிரிக் குடியிருப்புப் பள்ளிகள் உட்பட 1,100 முதல் 1,200 பள்ளிகளில் தொடங்கப்

பட்டது.





## MY Bharat கைபேசி செயலி





- MY Bharat கைபேசி செயலியானது புது டெல்லியில் தொடங்கப்பட்டது.
- இது இளையோர் விவகாரத் துறையின் கீழான ஓர் இளையோர் தலைமைத்துவம் மற்றும் சமூக ஈடுபாட்டுத் தளமாகும்.
- 1.81 கோடிக்கும் மேற்பட்ட இளையோர்களும் 1.20 லட்சத்திற்கும் மேற்பட்ட அமைப்புகளும் MY Bharat தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- பொதுச் சேவை மையங்கள் (CSC) ஆனது அதன் பரவலான அணுகலுக்காக MY Bharat தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டன.
- இந்தச் செயலியானது தன்னார்வத் தொண்டு, உள்ளகப் பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் திறன் கட்டமைப்பு வாய்ப்புகளின் கைபேசி வழியிலான அணுகலை வழங்குகிறது.

## ICDS திட்டத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு




- ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைகள் (ICDS) திட்டம் ஆனது 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று அப்போதையப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் தொடங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி, ICDS ஆனது சாக்சம் அங்கன்வாடி திட்டம் மற்றும் POSHAN 2.0 ஆகியவற்றுடன் மறுபெயரிடப் பட்டு இணைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 13.96 லட்சம் (1.396 மில்லியன்) அங்கன்வாடி மையங்கள் 7.65 கோடி (76.5 மில்லியன்) குழந்தைகளுக்கு சேவை வழங்குகின்றன.
- ICDS ஆனது ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்பகாலத்தியக் குழந்தைப் பராமரிப்பு, கல்வி, ஊட்டச்சத்து மற்றும் சுகாதார சேவைகளை வழங்குகிறது.

## பிராந்தியக் கிராமப்புற வங்கிகளின் (RRBs) பொன்விழா




- 2025 ஆம் ஆண்டானது, இந்தியாவில் பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் (RRBs) நிறுவப்

பட்டதன் 50 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.

- இந்தியாவின் கிராமப்புற மற்றும் வேளாண் துறைகளுக்கு அணுகக்கூடிய வங்கி மற்றும் கடன் சேவைகளை வழங்குவதற்காக 1975 ஆம் ஆண்டில் RRB வங்கிகள் உருவாக்கப் பட்டன.
- இந்திரா காந்தி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், கிராமப்புறக் கடன் தொடர்பான நரசிம்மன் குழுவின் பரிந்துரைகளின் பேரில் இது நிறுவப் பட்டது.
- இந்தியாவில் தற்போது 43 RRB வங்கிகள் வெவ்வேறு நிதி வழங்கீட்டு வங்கிகளின் கீழ் இயங்குகின்றன என்பதோடு, இவை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) மற்றும் NABARD ஆகியவற்றினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றன.

## மாநிலங்களுக்கான பேரிடர் தணிப்பு திட்டங்கள்




- மத்திய உள்துறை அமைச்சகத்தின் தலைமையிலான உயர்மட்டக் குழுவானது, ஒன்பது மாநிலங்களுக்கு 4645.60 கோடி ரூபாய் மதிப்புள்ள தணிப்பு, மீட்பு மற்றும் மறு கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதில் அசாம், கேரளா, மத்தியப் பிரதேசம், ஒடிசா, இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை அடங்கும்.
- அசாமில் ஈரநிலங்களை மீட்டெடுப்பதற்காகவும், அவற்றைப் புத்துயிர் பெறச் செய்வதற்காகவும் 692.05 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இது பிரம்மபுத்ரா நதி அமைப்பில் வெள்ளப் பாதிப்பிற்கான தாங்கும் தன்மையை மேம்படுத்துவதையும் நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2444.42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடங்கப்பட்ட நகர்ப்புற வெள்ள அபாய மேலாண்மைத் திட்டத்தின் இரண்டாம் கட்டமானது, நகர்ப்புற வெள்ளப் பாதிப்பினால் பாதிக்கப்படக்கூடிய 11 நகரங்களுக்குப் பயனளிக்கும்.
- அசாம் மாநிலத்திற்கு 1270.79 கோடி ரூபாய் நிதி உதவி மற்றும் 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளுக்குப் பிறகு கேரளாவிற்கு முறையே 260.56 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கு, மாநிலப் பேரிடர் மீட்பு நிதியத்திற்கான (SDRF) மத்திய அரசினுடைய பங்கின் இரண்டாவது தவணையாக 24.40 கோடி ரூபாயை முன்கூட்டியே வழங்கவும் இந்தக் குழு ஒப்புதல் அளித்தது.

# சர்வதேசச் செய்திகள்

## உலக பசுமைப் பொருளாதார உச்சி மாநாடு 2025




- 11வது உலகப் பசுமை பொருளாதார உச்சி மாநாடு (WGES) ஆனது, ஐக்கிய அரபு அமீரகத்தில் துபாய் உலக வர்த்தக மையத்தில் நடைபெற்றது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Innovating for Impact: Accelerating the Future of the Green Economy" என்பதாகும்.
- இந்த உச்சி மாநாடு ஆனது நீர், ஆற்றல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் கண்காட்சியுடன் (WETEX 2025) நடைபெற்றது.
- இந்த உச்சி மாநாடு ஆனது தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, கொள்கைக் கட்டமைப்புகள், பருவநிலை நிதி, சமத்துவம் மற்றும் இளையோர்களின் ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.
- இந்த உச்சி மாநாட்டின் போது, பசுமைப் பொருளாதாரத்திற்கான உலகளாவியக் கூட்டணி (GAGE) ஆனது 2024–2025 ஆம் ஆண்டிற்கான அதன் முன்னெடுப்புகளின் தொகுப்பை வெளியிட்டது.

## இந்தியா மற்றும் ரஷ்யாவின் உத்திசார் கூட்டாண்மை

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 03 ஆம் தேதியன்று, இரு நாடுகளும் இந்த "சிறப்பு மற்றும் சிறப்புரிமை கொண்ட உத்தி சார் கூட்டாண்மையின்" 25 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கின்றன.
- 2000 ஆம் ஆண்டு அக்டோபர் 03 ஆம் தேதியன்று, இந்தியாவும் ரஷ்யாவும் உத்தி சார் கூட்டாண்மை குறித்த பிரகடனத்தில் புது டெல்லியில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தத்தில் அப்போதையப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஆகியோர் கையெழுத்திட்டனர்.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்த உத்தி சார் கட்டமைப்பின் கீழ் இரு நாடுகளும் 20க்கும் மேற்பட்ட வருடாந்திர இருதரப்பு உச்சிமாநாடுகளை நடத்தியுள்ளன.
- எரிசக்தி, பாதுகாப்பு, அணு சார் தொழில்நுட்பம், விண்வெளி மற்றும் மருந்துகள் உள்ளிட்ட முக்கியத் துறைகளில் இந்தியாவும் ரஷ்யாவும் ஒத்துழைப்பினை மேற் கொள்கின்றன.
- இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் ஆனது 2024–25 ஆம் ஆண்டில் 65 பில்லியன் அமெரிக்க டாலர்களை தாண்டியது.
- ரஷ்ய நாடானது, S-400 எறிகணை அமைப்புகள் மற்றும் சுகோய் விமானங்கள்


உள்ளிட்ட ஒப்பந்தங்களுடன் இந்தியாவின் மிகப் பெரியப் பாதுகாப்பு வழங்கீட்டு நாடுகளில் ஒன்றாக உள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையம் ஆனது ஒரு மாபெரும் இந்திய-ரஷ்ய சிவில் அணுசக்தி திட்டமாகும்.
- பிரம்மோஸ் ஏறிகணை திட்டம் போன்ற ஒப்பந்தங்களின் கீழ் இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டாக இணைந்து இராணுவ வன்பொருளை உருவாக்குகின்றன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## புதிய அல்சைமர் மருந்து




- லெக்கனேமாப் என்பது ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு மருந்து ஆகும், இது மூளையில் உள்ள அமிலாய்டு புரதங்களை குறிவைத்து ஆரம்ப கட்ட நரம்பியல் சிதைவு/அல்சைமர் நோய் பாதிப்பினை மிதப்படுத்துகிறது.

- இது ஆஸ்திரேலியாவால் அங்கீகரிக்கப் பட்டது.
- இதை அல்சைமர் நோயின் ஆரம்பக் கட்டங்களில் மட்டுமே பயன்படுத்த முடியும்.
- இதன் பக்க விளைவுகளில் 12.6 சதவீத நோயாளிகளில் மூளை வீக்கம் மற்றும் ApoE4 மரபணு உள்ளவர்களுக்கு அதிக ஆபத்து ஆகியவை அடங்கும்.
- டிமென்ஷியா/மறதி நோய் என்பது படிப்படியான நினைவாற்றல் சார்ந்த அல்லது சிந்தனை சிக்கல்களை ஏற்படுத்தும் ஒரு நிலையாகும்.

## நாசாவின் IMAP திட்டம்





- நாசாவின் விண்மீன் மண்டல ஆய்வு மற்றும் முடுக்கக் கலமானது (IMAP) ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் 9 ஏவு வாகனம் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- புவி மற்றும் விண்வெளி வானிலையில் சூரியனின் தாக்கத்தைப் பற்றிப் புரிந்து கொள்வதற்காக IMAP கலமானது அயனிச் செறிவு மண்டலம், சூரியக் காற்று மற்றும் விண்மீன் மண்டலங்களுக்கு இடையேயான துகள்களை ஆய்வு செய்யும்.
- சூரிய மற்றும் விண்மீன் மண்டலங்களுக்கு இடையேயான செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிப்பதற்காக வேண்டி இந்த விண்கலம் ஆனது முதல் லக்ராஞ்ச் புள்ளியிலிருந்து (L1) செயல்படும்.
- விண்வெளி வானிலை முன்னறிவிப்பை வழங்குவதற்கும், செயற்கைக்கோள்கள் மற்றும் விண்வெளி வீரர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் இது சுமார் 10 கருவிகளைக் கொண்டுள்ளது.

## நெற்பழப் பாதிப்பு நோய் – பஞ்சாப்

- நெற்பழப் பாதிப்பு (ஹால்டி ரோக்) என்பது நெற்பயிர்களின் பூக்கும் காலத்தின் போது பயிர்களைப் பாதிக்கின்ற உஸ்டிலாஜினாய்டியா வைரன்களால் நெற்பயிர்களில் ஏற்படும் ஒரு பூஞ்சை நோயாகும்.
- இந்த நோயானது, மஞ்சள் மற்றும் பின்னர் பச்சை கலந்த கருப்பு நிறப் பூஞ்சை

வளர்ச்சியாக ஒரு சில தானியங்களில் தோன்றும்.

- இது தானியத்தின் எடையைக் குறைத்து, வெளிர் தன்மையை ஏற்படுத்தி, விதை முளைப்பைக் குறைக்கிறது மற்றும் குறிப்பிடத்தக்க மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் மின் கழிவு நெருக்கடி 2025

- 2025 ஆம் ஆண்டில் இந்தியா 2.2 மில்லியன் டன் மின் கழிவுகளை உருவாக்கியது என்ற நிலையில் இது 2017–18 ஆம் ஆண்டில் பதிவான அளவில் இருந்து 150% அதிகரிப்பு ஆகும்.
- இது சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய உலகளாவிய உற்பத்தியாளராக மாறியுள்ளது.
- இந்த மின் கழிவுகளில் பாதிக்கும் மேற்பட்டவை திறந்தவெளி எரிப்பு மற்றும் அமிலக் கசிவு போன்ற பாதுகாப்பற்ற முறைகளைப் பயன்படுத்தி முறைசாரா முறையில் கையாளப் படுகின்றன என்பதோடு, இதனால் சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் நச்சுகள் வெளியிடப்படுகின்றன.
- முக்கிய நகர்ப்புற மறுசுழற்சி மையங்களில் டெல்லி (சீலம்பூர், முஸ்தபாபாத்), மொராதாபாத் (உத்தரப் பிரதேசம்) மற்றும் பிவாண்டி (மகாராஷ்டிரா) ஆகியவை அடங்கும்.
- முறைசாரா மறுசுழற்சி ஈயம், பாதரசம் மற்றும் தீங்கு விளைவிக்கும் துகள்கள் போன்ற நச்சுப் பொருட்களை வெளியிடுகிறது.
- சில மறுசுழற்சி மண்டலங்களில் மாசுபாட்டின் அளவு ஆனது உலக சுகாதார அமைப்பின் காற்றுத் தரத்திற்கான பாதுகாப்பான வரம்புகளை விட 12 மடங்கு அதிகமாக உள்ளன.
- நச்சுத்தன்மையின் வெளிப்பாடு ஆனது சுவாச நோய்கள், நரம்பியல் சேதம் (குறிப்பாக

குழந்தைகளில்), தோல் கோளாறுகள் மற்றும் மரபணு தீங்கு போன்ற கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.

- 2022 ஆம் ஆண்டு மின்-கழிவு மேலாண்மை விதிகள் இருந்த போதிலும், அவற்றின் அமலாக்கம் தாமதமாக உள்ளது என்ற நிலையில், 2023-24 ஆம் ஆண்டு நிலவரப்படி மின் கழிவுகளில் 43% மட்டுமே முறையாக மறுசுழற்சி செய்யப் படுகிறது.




## சுவிட்சர்லாந்து பனிப்பாறைகள் நிலை 2025




- ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் குறைந்த பனிப்பொழிவு மற்றும் வெப்ப அலைகள் காரணமாக சுவிட்சர்லாந்து பனிப்பாறைகள் 2025 ஆம் ஆண்டில் அவற்றின் அளவில் 3 சதவீதப் பனிப்பாறைகளை இழந்தன.
- இது 2022, 2023 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளுக்குப் பிறகு நான்காவது பெரிய

வருடாந்திரப் பனிப்பாறை சரிவைக் குறிக்கிறது.

- கடந்த பத்தாண்டுகளில், சுவிட்சர்லாந்து அதன் மொத்தப் பனிப்பாறை அளவில் 25 சதவீதத்தினை இழந்துள்ளது.
- சுமார் 1,400 பனிப்பாறைகளைக் கொண்ட சுவிட்சர்லாந்து ஆனது, ஏற்கனவே 1,000க்கும் மேற்பட்ட சிறிய பனிப்பாறைகளை இழந்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## டிஜிட்டல் நில நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை




- குஜராத் மாநில அரசானது e-Dhara, iORA வலைதளம் மற்றும் கார்வி 2.0 போன்ற முன்னெடுப்புகள் மூலம் டிஜிட்டல் நில நிர்வாகத்தில் தேசியத் தலைமைத்துவத்தினை எட்டியுள்ளது.
- இது 35க்கும் மேற்பட்ட இயங்கலை வழி குடிமக்கள் சேவைகளை வழங்குகிறது.
- கிராமப்புற நில உரிமைக்காகவும் நிலத் தகராறுகளைக் குறைக்கவும் SWAMITVA போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்காக, அந்த மாநில அரசானது உள்நாட்டுத் தொழில் நுட்பத்தை (BISAG, ISRO, NIC மூலம்) பயன்படுத்துகிறது.
- பேரிடர் பாதிப்புக்குள்ளான கடலோர மாநிலமாக, தேசியப் புயல் அபாயக் குறைப்பு திட்டத்தின் கீழ் 76 புயல் நிவாரணத் தங்குமிடங்களை கட்டி, குஜராத் மாநிலம் சுழிய எண்ணிக்கையிலான உயிரிழப்பு உத்தியை ஏற்றுக் கொண்டது.
- ஒருங்கிணைந்த அணுகுமுறையானது, நிலச் சீர்திருத்தங்களைப் பேரிடர் மேலாண்மையுடன் இணைத்து, டிஜிட்டல் இந்தியா மற்றும் ஆத்மநிர்பர் பாரத் இலக்குகளுடன் இணைகிறது.

## 'Waste to Art Wall' முன்னெடுப்பு

- நாக்பூர் மாநகராட்சிக் கழகமானது (NMC), சத்ராஞ்சிபுரா மண்டலத்தில் உள்ள பிரேம் நகரில் 'கழிவுகள் நிறைந்தப் பகுதியை கலை சுவராக மாற்றுதல்' திட்டத்தைத் தொடங்கியது.
- இந்தத் திட்டமானது பொதுக் கலைக் கட்டமைப்பிற்காக மறுசுழற்சி செய்யப்பட்ட


கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தூய்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- கழிவு மேலாண்மையில் குடிமக்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதில் தூய்மையான இடம் ஒரு விழிப்புணர்வுக் கருவியாக செயல்படுகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## G.G. பாரிக் மறைவு





- புகழ்பெற்ற காந்தியவாதியும் சுதந்திரப் போராட்ட வீரருமான G.G. பாரிக் காலமானார்.
- 1924 ஆம் ஆண்டில் குஜராத்தின் ராஜ்கோட்டில் பிறந்த இவர், சம்யுக்த மகாராஷ்டிரா இயக்கத்தில் பங்கேற்றுள்ளார் என்பதோடு இவர் ஜனதா கட்சியுடன் தொடர்பு

உடையவரும் ஆவார்.

- வெள்ளையனே வெளியேறு இயக்கம் மற்றும் அவசர நிலையின் போது அவரது செயல்பாட்டிற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.
- இளையோர்களை மேம்படுத்துவதற்காகவும் நிலையான கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதற்காகவும் 12க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பணியாற்றி யூசுப் மெஹரல்லி மையத்தை பாரிக் நிறுவினார்.

### பண்டிட் சான்னுலால் மிஸ்ரா மறைவு




- புகழ்பெற்ற இந்துஸ்தானி செவ்வியல் கலைப் பாடகரும் தும்ரி நிபுணருமான பண்டிட் சான்னுலால் மிஸ்ரா காலமானார்.
- 1936 ஆம் ஆண்டில் உத்தரபிரதேசத்தில் பிறந்த இவர், கிரணா கரானாவின் உஸ்தாத் அப்துல் கனி கானின் கீழ் பயிற்சி பெற்றார்.
- அவர் ஆன்மீக ரீதியான ஆத்மார்த்தமான பாடல்களுக்குப் புகழ் பெற்றவர் ஆவார்.
- வாரணாசியின் இசைப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில், அவர் கிரானா மற்றும் பனாரஸ் கரானா இசைப் பாணிகளை இணைத்தார்.
- சான்னுலால் மிஸ்ராவுக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது மற்றும் ஆவாதி, பிரிஜ் பாஷா, உருது மற்றும் சமஸ்கிருதம் உள்ளிட்ட பல மொழிகளில் பக்தி இசைக்காகப் புகழ் பெற்றவர் இவர் ஆவார்.

## இதரச் செய்திகள்

### தேசியப் பாடலின் 150வது ஆண்டு விழா

- இந்தியா முழுவதும் தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலின் 150 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்கு மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

- பங்கிம் சந்திர சட்டர்ஜி இயற்றிய 'வந்தே மாதரம்' பாடலுக்கு, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று அரசியலமைப்புச் சபையானது தேசியப் பாடலின் அந்தஸ்தை வழங்கியது.
- இது 1875 ஆம் ஆண்டில் பங்கிம்சந்திர சட்டர்ஜி அவர்களால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டது.
- ஆனால், இப்பாடல் முதலில் 1882 ஆம் ஆண்டில் சட்டர்ஜியின் வங்காள மொழிப் புதினமான ஆனந்த மடம் நூலில் வெளியிடப் பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★